# மூர்த்திகளின் தத்துவம்

## From the
## VYASA BHARATA AGAMA SHILPA SADAS
## held at Ilayathangudi, Tamilnadu in 1962

ஸர்வேசுவரன் நம்மிடத்தில் வைத்த கருணையால், நம்மைப்போல ஒரு குடும்பஸ்தனாக இருந்து, எல்லாவற்றையும் நம்முடைய க்ஷேமத்துக்காகச் செய்கிறான். குழந்தையின் நன்மைக்காகத் தாய் பத்தியம் இருப்பது போல, நம்முடைய நன்மையைக் கருதி, கிருஹஸ்தத்தன்மையை அடைந்து, பாவனா மாத்ர புத்ராதி பெற்று விளங்குகின்றான். அவனிடத்தில் நாம் நம்மை அர்ப்பணம் செய்துகொண்டிருக்கிறோம். இயற்கையில் அவனிடம் எவ்வுருவமும் இல்லை: ஈசுவரன் அதிலே சம்பந்தப்படவும் இல்லை.

அறிவு இல்லாமல் போனால் புருஷத்தன்மை போய்விடும். ஈசுவரனுடைய அறிவுதான் முருகக்கடவுளாகி விளங்குகிறது. ஈசுவரனிடத்தில் கோபமும் இருக்கிறது. அதுவே சண்டேச்வர ரூபமாக இருக்கிறது. கெட்டதை அழிக்க அந்தக் கோபம் வேண்டியிருக்கிறது. எவன் ஒருவன் நன்மை செய்கிறானோ, அவனை ஆட்கொள்வது, எவன் ஒருவன் விரோதத்தைச் செய்கிறானோ அவனைத் தண்டிப்பது என்ற நிலையில் விநாயாகப் பெருமான் விளங்குகிறார். இடையூற்றை உண்டுபண்ணுவது, இடையூற்றை அகற்றுவது என்ற இரண்டு செயல்களும் அவரிடம் இருக்கின்றன. உண்மையான அன்பு உடையவர்களுக்கு ஈசுவரன் அநுக்கிரகம் செய்கிறான்

என்று ஆகமங்கள் சொல்கின்றன. உண்மையான பக்தி கொண்டு, ஈசுவர ஆராதனம் முதலான சத்காரியங்களைச் செய்து, பகவத் விஷயத்தில் ஈடுபட்டு இருப்பவனுக்கு, ஸர்வ விக்கினத்தையும் போக்கி, சிரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியவர் விநாயகப் பெருமான்.

எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் சக்தி இல்லையானால் ஒன்றும் நடவாது. ஒருவனால் நிற்க முடியவில்லையென்றால், சக்தி இல்லை என்று சொல்கிறோம். அந்தச் சக்தி ஈசுவரனிடத்திலிருந்து நமக்கு வந்தது. அவன் கொடுத்த சக்தியைக் கொண்டு, நாம் இயங்கி வருகிறோம். அவனிடம் பெரிய சக்தி இருக்கிறது. அவன் சக்தனாக இருக்கிறான். அதனாலே பிரபஞ்சம் எல்லாம் அர்த்தரூபமாகவும் சப்த ரூபமாகவும் உண்டாகிறது. மறுபடியும் அவனிடத்திலே லயத்தை அடைகிறது. பால் தயிராகிறது. தயிர் வெண்ணெயாகிறது. வெண்ணெய் நெய்யாகிறது. நெய் புழுவாகிறது. இது பூர்வ ஸம்பந்த த்யோதகமாவதில்லை. இன்னொரு விளைவுக்கு விவர்த்தனம் என்று பெயர். பஞ்சு நூலாகிறது. நூல் ஆடையாகிறது. ஆடை ஒரு கூடாரம் ஆகிறது. ஆரம்பத்தில் என்ன உண்டாயிற்றோ, அதன் சொரூபம் கடைசிவரையில் இதில் தெரியும். இந்த இரண்டுவித தர்மத்திலே ஈசுவரன் எதிலும் பட்டுக்கொள்வதில்லை. எல்லாவற்றையும் சக்தியைக் கொண்டு இயக்கி வைக்கிறான். சக்தியைக் கொண்டே லய தர்மத்தையும், போக தர்மத்தையும், அதிகார தர்மத்தையும் நடத்துகிறான். அப்படியுள்ள சக்தி, சொல்லினால் அவனிடமிருந்து வேறுபட்டு, உண்மையில் ஒன்றியும் இருக்கிறது. அக்நேருஷ்ணத்வவத் சக்தி: அவிநாபாவிநீ விபோ:.

பரமேசுவரனுக்கும் அம்பிகைக்கும் உள்ள சம்பந்தம், அக்கினிக்கும் உஷ்ணத்துக்கும் உள்ளது போலவும், மணியில் ஒலி போலவும், பூவில் மணம் போலவும் இருக்கும். பெயரினால் வேறுபட்டும், வேறல்லாத நிலை அது. அது தர்மதர்மி பாவம். அப்படியுள்ள ஒரு சக்தி, அவன் இருந்தால் தான் இருக்கும். அவன் இல்லையானால் அதுவும் இருக்காது. இதைத்தான் வேதம், ‘ஸ்வஸ்ராம்பிகயா‘ என்று சொல்கிறது. நாம் அம்பிகையை ஈசுவரனுடைய பத்தினியாகப் பாவிக்கிறோம். ஆனால் வேதம் அவனுடன் பிறந்தவளாகப் பாவிக்கிறது. அவன் இருந்தால் அது இருக்கும் என்ற உண்மையையே இது காட்டுகிறது.

இப்படி அநேக ரூபமாக, நம்முடைய க்ஷேமத்துக்காகவே அவன் விளங்குகிறான். நாம் அவனை எப்படி எப்படியெல்லாம் நினைக்கிறோமோ அப்படி அப்படியெல்லாம் உருவத்தைக் கொண்டு அருளுகிறான். மந்திர ரூபமான சரீரத்தைத் தாங்கி, நம்மை ஆட்கொள்ள வேண்டி நம்மிடம் பிரகாசிக்கிறான்.

அவனுடைய உருவங்களில் ஒன்று மகாலிங்கம். அது ரூபாரூபம் என்று சொல்லப்படும். அது அடையாளம் கண்டுகொள்ளும்படி கண், கால், கை முதலியவைகளைப் பெற்ற ரூபம் அன்று. ஆனாலும் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது ரூபாரூபம் ஆயிற்று.

உலகத்திலே ஏழு விதமான தோற்றம். பிரமன் முதல் எறும்பு வரையில் உள்ள பிறவிகள் ஏழு வகையானவை. எண்பத்துநாலாயிரம் யோனிபேதம் உண்டு. இவற்றில் எதைச் சார்ந்து மகாலிங்கம் என்று சொல்ல முடியாது. ஆனால்

அதனிடத்தில் தான் எல்லா ரூபங்களும் லயத்தை அடைகின்றன; எல்லா ரூபங்களும் உற்பத்தியாகின்றன.

லயம், போகம், அதிகாரம் என்ற மூன்று தர்மத்துக்கும் ஹேதுவான அவன், தன்னை விட்டுப் பிரியாததான சக்தியைக் கொண்டு, அர்த்தரூபமான பிரபஞ்சத்தை உண்டாக்கி, ரட்சித்து, அநுக்கிரகத்தைச் செய்கிறான்.

ஈசுவரன் மகாலிங்கமாகவும் இருக்கிறான்; ஜங்கமமாகவும் இருக்கிறான். கிராமந்தோறும், வீதிதோறும், ஆலயந்தோறும் இந்த இருவகை மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு காலந்தோறும் ஆங்காங்குள்ள பிராணிகளை ரட்சிக்கும்பொருட்டு, ஒவ்வொரு விதத்திலே பகவான் எழுந்தருளி, அவர்களுடைய அன்புக்கு ஈடுபட்டு, அநுக்கிரகிக்கிறான். அந்த மூர்த்தியே ஜங்கமரூபமான மூர்த்தி, உற்சவத்துக்கென்று தனியே மூர்த்தியைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? சகல ரூபமாக இருந்தால்தான், வெளியே எழுந்தருளிப் பிராணிகளுக்கெல்லாம் அநுக்கிரகத்தை உண்டுபண்ண முடியும். ஞானவான்களுக்கு மகாலிங்க ரூபமாக இருந்து அநுக்கிரகிக்கிறான். மற்றவர்களுக்கு உத்ஸவ மூர்த்தியாகவும் எழுந்தருளி அருள் புரிகிறான். ஜல ஜந்துக்களுக்கும் அவன் அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்பதை வேண்டித் தெப்பத் திருவிழாவை மேற்கொள்கிறான்.

இப்படியே மிருகயாத்ரோத்ரோத்ஸவம், வன மகோத்ஸவம் என்று பல உத்ஸவ பேதங்களில் பகவான் எழுந்தருளி ஆங்காங்குள்ள ஆருயிர்களுக்கு அருள்புரிகிறான். இதற்குத்தான் மகோத்ஸவ விதிகளே உண்டாயின.

நம் நாட்டில் நகரங்களில் மகோத்ஸவங்களின் பெயரோடே வீதிகள் இருப்பதை இன்றும் காணலாம். குடும்பரூபமாக இருந்துதான் அநுக்கிரகிக்க வேண்டும் என்கிற முறையில், ஸோமாஸ்கந்த சொரூபமாகவோ, சந்திரசேகர சொரூபமாகவோ இருந்து அநுக்கிரகிக்கிறான். எந்தச் சிவாலயத்தைப் பார்த்தாலும், உள்ளே மகாலிங்கம் இருக்கும். வெளியில் புறப்படும் ஜங்கம மூர்த்தியாக ஸோமாஸ்கந்த மூர்த்தி அல்லது சந்திரசேகர மூர்த்தி இருப்பார். ஸ்வாமி, அவர் பக்கத்திலே ஒரு குழந்தை-ஞானவடிவமாகிய சண்முகன், அம்பிகை என்று மூவரும் சேர்ந்த திருக்கோலமே ஸோமாஸ்கந்த மூர்த்தி.

அம்பிகை தனியாகவே ஈசுவரனுடைய அதிகாரத்தையெல்லாம் கொண்டு. பஞ்சப் பிரேதாஸனியாய் இருப்பது உண்டு. அது கிரியா சக்தி; சதுர்புஜம் தாங்கியவள். இன்னொன்று அடங்கிய முறையிலே உள்ள ஞானசக்தி அந்தச் சக்தி பக்கத்திலேயே இருக்கும். இச்சா சக்தி ஒரே பீடத்தில் அல்லது பின்னபீடத்தில் பக்கத்திலேயே இருக்கும். இப்படி மூன்று ரூபமாக இச்சா க்ரியா ஞான ரூபமாக இருக்கும் அம்பிகை ஈசுவரனுக்கு லய போக அதிகார க்ரியாத்ரயத்தை உண்டு பண்ணக்கூடிய முறையில் விளங்குவாள். போக சக்தி, அதிகார சக்தி, லய சக்தி என்று மூன்று சக்திகள் உண்டு. பஞ்சகிருத்தியங்களையும் நடத்தி உலகை உஜ்ஜீவனம் செய்வதற்கு, இந்தச் சக்தி த்ரயம் அவசியமாகிறது.

அப்போதைக்கப்போது மாயாதி மல பாசங்களையெல்லாம் நீக்கி ஞானத்தை உண்டுபண்ணுவதற்கு ஸ்கந்தன் இருக்கிறான். நாம் பள்ளத்தில் விழுந்துவிடுவோமானால், நம்மைத் தூக்கி ரட்சிப்பதற்குப் பக்கத்திலே

அவன் இருக்கிறான். இப்படி ஈசுவரன் ஜங்கம மூர்த்தியாய், கன்னியாகுமரி முதல் இமயமலை வரைக்கும் உள்ள சிவாலயங்களில் விளங்குகிறான்.

இந்த மூர்த்தியைப் பார்த்தால் மட்டும் போதுமா? அதன்மூலம் ஒரு நுட்பமான விஷயத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்கு உலகத்திலே எதை எடுத்தாலும், துவைதபாவம் இருக்கிறது. அந்தத்வைதபாவம் நீங்கி, அத்துவைதபோதம் நமக்கு வரவேண்டும். அந்த அறிவை இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தம் புலப்படுத்துகிறது. ஆண்-பெண், பகல், இரவு, உஷ்ணம்-சீதளம் இப்படி ஒன்றுக்கு ஒன்று விருத்தமாக இந்த உலகத்தில் இரட்டைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படி விருத்த தர்மத்தோடு இரண்டு இரண்டாக இருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் பற்று அற்று, ஏகமான ஒருமைப்பாட்டைப் பெற நாம் ஈசுவரனைத் தியானம் செய்வதற்கு முற்பட வேண்டும். நாமேதான் ஈசுவரன் என்ற அந்நியோந்நியமான பாவத்தைப் பெற வேண்டும்.

“ஸோஹம்பாவேந பாவயேத்” என்ற ஒரு நிலையை வேண்டும். இந்த நிலைக்கு, அந்த ஸோமாஸ்கந்த மூர்த்தி அறிகுறியாக இருக்கிறார். மூன்று மூர்த்திகளாக இருந்தாலும் ஒரே மூர்த்தியாகவே சொல்லப்பெறுகிறவர் அவர்.

சிவபெருமான் அங்கங்களில் அணிந்திருக்கும் ஆபரணங்களும் நமக்குப் பல கருத்துகளைக் காட்டுகின்றன. அவனுக்கு அங்கங்களில் உள்ள ஆபரணம் பாம்புகள். விஷத்தைக் கக்கும் அந்தப் பாம்புகளில் ஒன்றை ஜடையில் சுற்றிக்கொண்டிருக்கிறான். ஒன்றைக் கையிலே கங்கணமாகக் கொண்டிருக்கிறான். ஒன்றை யஜ்ஞோபவீதமாகக் கொண்திருக்கிறான்.

காலணியும் பாம்புதான். இப்படிச் சரீரம் முழுவதும் பாம்புமயம். அக்கினி ஜ்வாலையோடுகூட, விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கும் பாம்புகள் அவை. அவற்றைக் கண்டு பரமேசுவரனுக்கு ஏதாவது பயம் இருக்கிறதா? இல்லை. “பீதிர் நாஸ்தி”. பயம் துளியுமில்லை.

அமிர்த கலையை உடைய சந்திரனை அவன் சிரஸில் தரித்துக் கொண்டிருக்கிறான். சதா அமிர்த தாரையைப் பொழிந்துகொண்டிருக்கும் சந்திரனிடத்திலே உள்ள அமிருதத்தில் இறைவனுக்குப் பிரியம் உண்டா? அதுவும் இல்லை. பாம்பின் விஷத்துக்குப் பயமும் இல்லை; சந்திரனுடைய அமிருதத்தில் பிரியமும் இல்லை.

அநேக கல்பபேதங்களில் மறையும் பிரம்மாதிகளின் சிரசுகளை மாலையாக அணிந்திருக்கிறான். அது அவன் என்றும் இறவாதவன் என்பதைக் காட்டுகிறது. இறக்கின்ற தேவர்கள் பிரம்மா, விஷ்ணு ஆகியவர்களின் கபாலங்களையெல்லாம் மாலையாகவும், கையில் பிட்சாபாத் திரமாகவும் வைத்துக்கொண்டிருக்கிறான். காலபைரவ மூர்த்தியைப் பார்த்தாலும் வீரபத்திரரைப் பார்த்தாலும் இது தெரியும். இப்படிக் கபாலங்களையே அணிந்துகொண்டிருக்கிறானே, அதனால் அவனுக்கு ஏதாவது ஆசௌசம் உண்டா? லேசங்கூடக் கிடையாது. அவன் நித்திய சுத்தன். அவனுக்கு ஏது ஆசௌசம்? எத்தனையோ கல்பாந்தரங்களிலே வரக்கூடிய மஹாபாப பேதங்கள் எல்லாம் ஒரு தடவை கங்கையில் ஸ்நானம் பண்ணினால் போய்விடும் என்கிறார்களே, அவன் சதாசிரஸில் கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கிறானே, அதனால் அவனுக்கு ஆசௌசம் போய்விடுகிறது என்று சொல்லலாமா? அதுவும் இல்லை. கங்கையினால்

அவன் பரிசுத்தத்தை அடைவதுமில்லை. அவன் இயற்கையாகவே பரிசுத்தமுடையவன்.

இடுகாட்டிலுள்ள பஸ்மத்தை அவன் உடம்பு முழுவதும் பூசிக் கொண்டிருக்கிறான். அதனாலே அவனுக்கு ஏதாவது லஜ்ஜை இருக்கிறதா என்றால், லேசங்கூடக் கிடையாது. ஸ்திரீகளிடத்தில் ஆசைப்பட்டவர்கள், அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பார்கள்; சொத்துச் சுதந்தரம் கொடுப்பார்கள். இவனோ பார்வதிக்குத் தன்னுடைய சரீரத்தில் பாதியையே கொடுத்துவிட்டானே. ஆசை காரணமாக அவளுக்குத் தன்னுடைய சரீரத்தில் பாதியைக் கொடுத்தான் என்று நினைக்கலாமா? அதுமாதிரி அபேக்ஷை கொஞ்சங்கூட அவனுக்குக் கிடையாதாம்.

ஹிதம், அஹிதம் என்று உலகத்தில் இரண்டாக இருக்கும் எல்லாம் நீங்கி, ஒருமையாக தன்மை அடையும்படி பகவான் நமக்கு, இந்த ரூபமாகக் காட்சியைக் கொடுக்கிறான். இன்னும் அவனுடைய அங்கத்தில் இருக்கும்படியான விஷயங்களையெல்லாம் சொல்ல வேண்டுமானால், அவற்றில் ஒவ்வொன்றும் நமக்கு அநுக்கிரம் பண்ணுவதற்காகவே அமைந்திருக்கிறதென்று தெரியவரும். இத்தகைய சிவபெருமான் நம்மைக் காக்க வேண்டும் என்ற பிரார்த்தனையாக அமைந்திருக்கும் ச்லோகம் இது.

भीतिर्नास्ति भुजङ्गपुङ्गवविषात्, प्रीतिर्न चन्द्रामृतात् ,

नाशौचं हि कपालदामलुलनात्, शौचं न गङ्गाजलात्।

नोद्वेगश्चितिभस्मना, न च सुखं गौरीस्तनालिङ्गनात् ,

आत्मारामतया हिताहितसमो रुद्रो हरः पातु नः॥

ஆற்றுநீர் கடலில் சேரும் காலத்தில் எப்படிக் கடல் நீராக ஆகிவிடுகிறதோ அதுபோலவும், அநேக ருசியுள்ள ரசங்களை ஒரு பாத்திரத்தில் சேர்த்தால், எந்தப் பக்கத்தில் எந்த ரசம் இருக்கிறது என்று சொல்ல முடியாதோ அதுபோலவும் ஜீவேசுவர ஐக்கியபாவம் இருக்கிறது. ஜீவேச்வர ஸம்யோகம் அல்லது இரண்டறக் கலத்தல் எனும் தர்மத்தை ஸோமாஸ்கந்த மூர்த்தியினாலே தெரியச்செய்து பகவான் நம்மை ஆட்கொள்கிறான்.

இரண்டினுடைய ஸம்யோகம் வேண்டும். தட்சிணாமூர்த்தியாகிய பரமாசாரியர், இதைத்தான் சின் முத்திரையினாலே காட்டினார். உலகம், உயிர், கடவுள் என்ற மூன்றில் உயிர் உலகவாசனையற்று, கடவுளோடு ஒன்றாக வேண்டும் என்று காட்டுகிறார். அதுவே சின்முத்திரை. அதற்கு அநேக விதமாகப் பொருள் சொல்லலாம். எந்த விதமாக இருந்தாலும், இரண்டான நிலை மாறி, ஒன்று என்ற ஏகீபாவம் உண்டாகும்படியான ஒரு நிலையைப் பரமேசுவரன் தக்ஷிணாமூர்த்தி சொரூபத்திலும் அநுக்கிரகம் பண்ணுகிறான். இப்படியே அவன் மேற்கொண்டுள்ள மூர்த்திபேதங்கள் எல்லாம் ஜீவர்கள் அவனுடைய அநுக்கிரகத்தை அடைவதற்குரிய வழியைக் காட்ட உபகாரமாக இருக்கின்றன.